Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 5-ஆம் தேதி, சனிக்கிழமை. [இதழ் ந. 3

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் ஆகாய விமானப் போர்.

சென்ற வாரம் ஆகாய விமான மந்திரி சபை ஒரு முக்கியமான துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது. அதில் மனித சமூக சரித்திரத்திலேயே மிக முக்கியமான சண்டையைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. 1940-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 8-ஆம் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி வரையில், அதாவது 84 நாள்கள் ஜெர்மானியர்கள் பிரிட்டனைத் தாக்கித் தோற்கடிக்க பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள். சில மாதங்களுக்குள், யுத்தத்தை முடித்துவிடலாமென்று ஜெர்மானியர்கள் பகற் கனவு கண்டிருந்தார்கள். அந்தக் கனவைச் சிதரடித்த கதை துண்டுப்பிரசுரத்தில் காணப்படுகிறது.

முதன் முதலில், ஜெர்மானிய ஆகாய விமானங்கள், பட்டப்பகலில் பிரிட்டனைத் தாக்கின. 4, 5 அல்லது 6 மைல் உயரப் பறந்து, சூரிய வெளிச்சத்தில் வெண்புகைவிட்டுக்கொண்டு, சிறு வைரத்துண்டுகள் போல் அவைகள் பிரகாசித்தன. அவைகள் என்னென்ன செய்யப்போகின்றன என்று கீழே சாதாரண வேலைகளில் ஈடுபட்ட மக்கள் அப்போது அறியவில்லை. பகற் காலங்களில், அவைகள் தாக்கியதன் பயனாக, யுத்த வேலைகளில் சம்பந்தப்படாத சாதாரண ஜனங்கள் சுமார் 1,700 பேர் உயிரிழந்தார்கள்; 3,360 பேர் காயமடைந்தார்கள். ஆனால், அந்த 84 நாள்களில், 2,375 ஜெர்மன் ஆகாய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இரவில் வீழ்த்தப்பட்ட விமானங்களும், அடிபட்டுத் தட்டுத்தடுமாறி, தங்களுடைய இடத்துக்குச் சென்று பிரயோசனமில்லாமல் போன விமானங்களும் இந்தக் கணக்கில் சேரவில்லை.

2,375 ஜெர்மன் விமானங்களை வீழ்த்தியதில், பிரிட்டனுக்கு நஷ்டமில்லாமல் போகவில்லை. இந்த விமானப்போரில் 375 பிரிட்டிஷ் விமான ஓட்டிகள் உயிரிழந்தார்கள். 358 பேர் காயமடைந்தார்கள். இதுதான் 84 நாள்களில் ஏற்பட்ட சேதம்.

பட்டப்பகலில் பிரிட்டனைத் தாக்கியதால் பெருஞ்சேதமடைந்த ஜெர்மன் விமானப்படை, பிறகு தன்னுடைய யுத்த முறையை மாற்றிக்கொண்டது. பகலில் போய் அகப்பட்டுக்கொள்வதற்குப் பதிலாக இரவில் சென்று தன்னுடைய துர்க்காரியத்தைச் செய்ய ஆரம்பித்தது. நெதர்லாண்டு, பெல்ஜியம், பிரான்சு ஆகிய மூன்று நாடுகளை 37 நாள்களில் ஜெயித்த ஜெர்மனியர்கள் பிரிட்டனோடு 84 நாள்கள் போராடியும் ஜெயம்பெற முடியவில்லை. இந்த விமானப்போர் ஆரம்பிக்கும்போது இருந்ததைவிட, முடிவில் பிரிட்டிஷ் விமானப்படை அதிகப்படியான பலம் பெற்றிருந்தது. ஜெர்மனியின் மகத்தான ‘லப்டுவாப்’ என்ற விமானப்படையின் தோல்வியினால் அதிக ஜாக்கிரதையாகத் தயார் செய்யப்பட்ட ஹிட்லருடைய போர்த்திட்டம் பிரிட்டனைப் பொறுத்தவரையில் பயனில்லாமல் போய்விட்டது. இந்த விவரங்கள் விமான மந்திரி சபை அறிக்கை வெளியீட்டிலிருந்து தெரியவருகிறது. இந்த அரசாங்க அறிக்கை, வெளியான மூன்று மணி நேரத்துக்குள் 50,000 பிரதிகள் பொது ஜனங்களால் வாங்கப்பட்டன. 300,000 வாங்குவதற்கு ‘ஆர்டர்’கள் கொடுக்கப்பட்டன.

சென்ற வாரம், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை ஜெர்மனியின் பல பாகங்களில் வெடிகுண்டுகளைப் போட்டு சேதம் விளைவித்தது. ஜெர்மனியின் வட மேற்குப் பிரதேசத்திலுள்ள கலோன், டசல்டார்ப், என்ற இரண்டு முக்கியமான இடங்களின்மேலும், ரூர் பிரதேசத்திலும், ரைன்லாண்டு பிரதேசத்திலும் வெடிகுண்டுகளைப் போட்டன.

மேலும், ஜெர்மனியின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் பிரெஞ்சு தேசக் கரையோரத் துறைமுகங்கள் மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டு மாரி பொழிந்தன. போர்தோ என்ற பிரான்சின் தென் மேற்கு துறைமுகத்தில் ஒளிந்துகொண்டிருந்த ஷார்ன் ஹோர்ஸ்ட், நீசனோ என்ற பகைவர்களுடைய இரண்டு யுத்தக் கப்பல்கள்மேல் மார்ச்சு மாதம் 30-ஆம் தேதி இரவு கடுமையான வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்றது.

அதே யிரவு, ஜெர்மானியர்களால் கைப்பற்றப்பட்ட பிரெஞ்சு கரையோரத் துறைமுகங்கள்மேல் போட்ட குண்டுகள் வெடித்த வெளிச்சம் இங்கிலாந்தின் கரை யோரத்தில் தெரிந்தது. முக்கியமாக, கலே என்ற பிரசித்திபெற்ற துறைமுகத்திலிருந்து டங்கர்க் என்ற துறைமுகம் வரைக்கும் குண்டுகள் வெடிக்கும் வெளிச்சமும், பீரங்கிகள் சுடும் வெளிச்சமும் நன்றாகத் தெரிந்தன.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை சென்ற ஞாயிற்றுக்கிழமை மூன்று வெற்றிகளையடைந்தது. ஒரு ஜெர்மானிய விமான எதிர்ப்புக் கப்பல், யுத்த சாமான்கள் கொண்டுசேர்க்கும் சாமான் கப்பல், லாயிர் என்ற பிரெஞ்சு ஆறு கடலில் கலக்குமிடத்தில் இருந்த சப்மரீன் அழிப்புக் கப்பல், ஆகிய இந்த மூன்று கப்பல்களையும் பிரிட்டிஷ் விமானப்படை தாக்கி, யந்திர பீரங்கிகளினால் சுட்டு, வெடிகுண்டுகளினால் உடைத்து அழித்தது.

மேற்கு ஜெர்மனியில், சென்ற வாரம் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை வெடிகுண்டுகள் போட்டு, அநேக கட்டடங்கள் இடிந்து விழுந்தனவென்றும், வேறு இதர கட்டடங்கள் அதிகமாகப் பழுது செய்யப்பட்டனவென்றும், ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனம் ஒப்புக்கொள்ளுகிறது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை, ஜெர்மன் விமானப்படை லண்டன்மேல் படையெடுக்கவில்லை. பிரிட்டனின் தலைநகரம், ஜெர்மன் விமானத்தொந்தரவு தொடர்ச்சியாக இல்லாமல் இருந்ததில் இது பத்தாம் நாள். ஆனால் பிரிட்டனின் கரையோரப் பிரதேசங்கள் சிலவற்றைத் தனிப்பட்ட ஜெர்மன் விமானங்கள் தாக்கின. கிழக்கு இங்கிலாந்திலும், கிழக்கு, தென்கிழக்கு ஸ்காட்லந்திலும், சிதறிய இடங்களில் வெடிகுண்டுகள் போடப்பட்டன. ஆனால் நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை. ஜனச்சேதமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

மார்ச்சு மாதம் 29-ந் தேதியோடு முடியும் வாரத்தில் பிரிட்டனில் நடந்த யுத்தத்தில், ஜெர்மானியர்கள் எட்டு ஆகாய விமானங்களை இழந்தார்கள். இதல்லாமல், இரண்டு ஜெர்மன் ஆகாய விமானங்கள் பிரிட்டிஷ் கடற்படையால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்த வாரத்தில் இடாலியர்கள் கிழக்கு அரங்கத்தில் 26 விமானங்களை இழந்தார்கள். பிரிட்டிஷார் 3 விமானங்களை இழந்தார்கள். அவைகளில் இரண்டு விமான ஓட்டிகள் உயிர் தப்பினார்கள்.

எப்ரல்மீ 1-ந் தேதி இங்கிலாந்தின்மேல் பறந்த ஐந்து ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மேகங்களில் மறைந்துகொண்டு, ஜெர்மன் விமானங்கள் பிரிட்டிஷ் விமானத் தளங்கள்மேல் சிறிய தாக்குதல்கள் செய்தன. ஆனால் அவைகள் ஒன்றும் பிரயோசனப்படவில்லை. விமானத் தளங்கள் உபயோகப்படாதபடி யாதொரு சேதமும் செய்ய முடியவில்லை.

ஆங்கிலக் கால்வாயில், ஒரு ஜெர்மன் வெடிகுண்டு விமானம் சென்ற புதன்கிழமை, ஒரு பிரிட்டிஷ் விமானத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டது. புதன்கிழமை இரவு, லண்டன்மேல் ஒரு வெடிகுண்டுகூட விழவில்லை. இப்படி தொடர்ந்து லண்டனில் வெடிகுண்டு விழாமல் இருந்த இரவில் இது 13-ம் நாள். இரவு லண்டனில் "ஜாக்கிரதை" எச்சரிக்கை ஊதப்படவேயில்லை. பிரிட்டனில் இதர இடங்களில் விமானத்தாக்குதல்களே இல்லை.

பிரிட்டனின் கிழக்குக் கரையோரத்தின்மேலும், ஸ்காட்லாந்தின்மேலும் ஒரு ஜெர்மன் விமானம் அதற்கு முன்நாள் பறந்து, சில தொழிற்சாலைக் கூட்டங்களின்மேல் வெடிகுண்டுபோட்டு சிறிது சேதம் விளைவித்தது.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள், பிரெமென் என்ற இடத்தில் இருக்கும் ஜெர்மன் கப்பல் கட்டும் சாலைகள்மேலும் எம்டன் என்ற இடத்தில் உள்ள ஜெர்மன் தொழிற்சாலைகள்மேலும் வெடிகுண்டுகள் போட்டன. பிரெமென் என்ற இடத்தை பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை இதுவரை 61 தடவை தாக்கியிருக்கிறது; எம்டன் என்ற இடத்தை 37 தடவை தாக்கியிருக்கிறது. எம்டனில் உபயோகப்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் இதுவரை உபயோகப்படுத்தப்படாத மிகுந்த கனமுள்ள வெடிகுண்டுகள். அவைகள் வெடித்ததின் பயனாக, சில வீடுகள் அப்படியே ஆகாயத்தில் பறந்ததாக ஒரு விமானஓட்டி கூறுகிறார்.

ராட்டர்டாம் என்ற பெட்ரோல் துறைமுகத்தின் மேலும், அருகாமையில் உள்ள இரண்டு ஆகாய விமானத்தளங்கள் மேலும், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

### 2. ஆப்பிரிக்காவும், மத்திய தரைக்கடலும்.

இடலியின் சர்வாதிகாரி முசலோனியின் பலத்தை அடக்கி ஒடுக்கி அடியோடு அழிப்பதற்கு, பிரிட்டனும் அதனுடைய நேசநாடுகளாலும் முடியும் என்று பிரிட்டிஷ் முதன்மந்திரி, மிஸ்டர் சர்க்கில், சமீபத்தில் கூறினார். அவர் கூறியது இவ்வளவு சீக்கிரம் நிறைவேறிவிடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமுடியாது. ஆனால் மத்திய தரைக் கடலில் நடந்த யுத்தத்தில் 5 இடாலிய யுத்தக் கப்பல்கள் பிரிட்டிஷ் கப்பற்படையால் முழுகடிக்கப்பட்டன என்று சென்ற திங்கட்கிழமை வெளியான செய்தியிலிருந்து தெரிகிறது. முழுகடிக்கப்பட்ட பெருங் கப்பல்களில் மூன்றின் பெயர், பியூமி, போலா, சாரா என்பதாகும். இவைகள் ஒவ்வொன்றும் 10,000 டன் எடையுள்ள கப்பல்கள். இதனால் பிரிட்டிஷ் கடற்படைக்கு யாதொரு சேதமும் கிடையாது. மத்தியதரைக்கடற் படைத்தலைவர், அட்மிரல் சர் ஆண்ட்ரூ கன்னிங்காம் என்பவர் இந்தப் போரில் தலைமை வகித்து பிரிட்டனுக்கு வெற்றி கிடைக்கும்படியான முறையில் போர் புரிந்தார். (மத்தியதரைக் கடல் யுத்ததைப்பற்றிய கட்டுரை இந்த இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.)

ஆப்பிரிக்கா யுத்தத்திலும், இடலி புறமுதுகிட்டு ஓடிக்கொண்டிருக்கும்படியான நிலையிலிருக்கிறது. கேரன் என்ற முக்கியமான இடம் இடாலியர்களிடமிருந்து பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது. இது எரீட்ரியாவின் சாவி என்று சொல்லலாம். இந்த மலைக் கோட்டையை 52 நாள் போருக்குப்பின் இடாலியர்கள் கைவிட்டுவிட்டார்கள். இந்த இடத்தில் அநேக இடாலியர்கள் கைதியானார்கள். ஏராளமான யுத்த சாமான்கள் பிரிட்டிஷார் கையில் அகப்பட்டன.

கேரனைப் பிடித்ததில், இந்தியச் சிப்பாய்கள் மிக முக்கியமான வேலை செய்திருக்கிறார்கள். கசாலா என்ற இடத்திலிருந்து கேரனுக்கு இந்திய சிப்பாய்கள் நடந்து போயிருக்கிறார்கள். இந்த 140 மைல் தூரத்தை, 15 நாள்களில் நடந்திருக்கிறார்கள். வழி முழுவதும், போர்புரிந்த வண்ணமாகப் போயிருக்கிறார்கள். வச்சை, பேரு, பேஜார், அகோர்தத் முதலிய இடங்களிலெல்லாம் வீரத்துடன் போர்புரிந்து, கேரனையும் கைப்பற்றுவதில் பெரும்பங்கெடுத்துக் கொண்டார்கள். நவீன யுத்த முறைகளை அதிசீக்கிரத்தில் நமது சிப்பாய்கள் கற்றுக்கொண்டதாகவும், வாத்து எவ்வளவு இயற்கையாகத் தண்ணீரில் நீந்துமோ, அதுபோல புதிய முறைகளை அவர்கள் கையாண்டதாகவும், இந்தியப் படையின் தளகர்த்தர் கூறுகிறார்.

மலைப் பிரதேசங்களில் படைகள் முன்னேறிச் செல்வதென்றால், இஞ்சினீயர்களின் உதவி அதிகமாக வேண்டியிருக்கும். சென்னை, பம்பாய், வங்காளம் முதலிய மாகாணங்களிலிருந்து சென்ற "சாப்பாஸ் அண்டு மைனர்ஸ்" என்ற படையும் மெச்சத் தகுந்த அபாரமான வேலைசெய்திருக்கிறது. அஸ்மாராவுக்குப் போவதைத் தடுக்க இடாலியர்கள் ரோட்டுகளை அடைத்து விட்டதை, வெடிகுண்டுகள் உபயோகித்து இந்திய "சாப்பர்ஸ்" படையினர் உடைத்தெறிந்தார்கள்.

ஹரார் என்ற இடத்திலிருந்து முன்னேறிச் சென்ற பிரிட்டிஷ் துருப்புகள் டிரிடீலா என்ற இடத்தையும் பிடித்து விட்டன. டிரிடீலா என்பது அட்டிஸ் அபாபா, ஜிபூதி ரெயில்வே பாதையில் இருக்கும் ஒரு முக்கியமான பட்டணம். இந்தப் பட்டணத்தைக் காலிசெய்துவிட்டு இடாலியர்கள் ஓட்டம் பிடித்தார்கள்.

எரீட்ரியா பிரதேசத்தில் இதுவரைக்கும் 3,775 இடாலியச் சிப்பாய்களையும், 68 ராணுவ உத்தியோகஸ்தர்களையும் யுத்தக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டார்கள்.

எரீட்ரியாவுக்குத் தலைநகரமான அஸ்மாராவை, பிரிட்டிஷ் படைகள் பிடித்துவிட்டதாக எப்ரல்மீ 1-ந் தேதி அறிவிக்கப்பட்டது. கேரனைப் பிடித்த ஐந்து நாட்களுக்குப் பிறகு, அஸ்மாராவைக் கைப்பற்றியது ஒரு பெரிய வெற்றியாகும். பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையும் தைரியமிழந்த இடாலியர்களை 75 மைல் தூரம் துரத்திக்கொண்டு சென்று, பிறகு அஸ்மாராவைக் கைப்பற்றின. அஸ்மாராவைப் பிடித்த பிறகு, சிகப்புக்கடலில் இடலியின் சிறந்த துறைமுகமான மசாவாவுக்குச் செல்வதற்கு வழி தங்குதடையில்லாமல் இருக்கிறது. எரீட்ரியாவின் தலைநகரைப் பிடித்ததினால், 75 மைலுக்கப்பாலுள்ள மசாவாவும் அட்டிஸ் அபாபாவும் கூடிய சீக்கிரம் பிரிட்டிஷாரால் கைப்பற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற வெள்ளிக்கிழமை வெளியான செய்திகளில், எரீட்ரியாவின் பெரும்பாலான பாகம் பிரிட்டிஷார் கைக்கு வந்துவிட்டதென்றும், கிழக்காப்பிரிக்காவில் நடைபெறும் யுத்தம் முடிவு பெறும்படியான நிலையிலிருக்கிறதென்றும், அட்டிஸ் அபாபாவை நோக்கி பிரிட்டிஷ் துருப்புகள் செல்லுகின்றனவென்றும், அட்டிஸ் அபாபாவுக்கு 180 மைல் தூரத்திலுள்ள மீசோ என்ற இடத்தை பிரிட்டிஷார் பிடித்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் உள்ள நேசப் பான்மை அதிகரித்துக்கொண்டு வருகிறது. இப்போது வாடகை கடன் மசோதா சட்டமான பிறகு, வாடகை யுத்த தளங்கள் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது; பிரிட்டன், அதனுடைய குடியேற்ற நாடுகளாகிய கானடா, நியூ பவுண்ட்லாண்டு ஆகிய இவைகளின் அட்லாண்டிக் கடல் யுத்ததளங்களை அமெரிக்காவுக்கு வாடகைக்கு விடவேண்டுமென்பது தான் ஒப்பந்தத்தின் முக்கியமான பாகம்.

ராபின் லாக்ஸ்லி, ராபின்ஹூட், என்ற இரண்டு அமெரிக்க சாமான் கப்பல்கள் புறப்படுவது ஏழு நாள்களுக்குத் தாமதப்பட்டது. இக்கப்பல்கள் ஆப்

பிரிக்காவுக்குப் போகின்றன. தாமதமான காரணம் கப்பல் வேலையாட்கள் அதிகமான மேற்சம்பளம் அல்லது “போனஸ்” கேட்டதுதான்.

சர்வாதிகாரிகளின் தீமையைப்பற்றி, பிரசிடெண்டு ரூஸ்வெல்ட், அமெரிக்காவின் பொதுஜனங்களுக்கு எச்சரிக்கை செய்தார். நாஜிகளுடைய நோக்கம், பொதுஜனங்களுக்கு அமெரிக்க அரசாங்கத்திடம் இருக்கும் நன்மதிப்பைக் கெடுப்பதுதான் என்று அவர் தெரிவித்தார். அமெரிக்கர்களிடம் பயத்தை உண்டாக்குவதற்குப் பதிலாக மன உறுதியை உண்டாக்கியிருக்கிறார்களென்றும் கூறினார்.

அமெரிக்காவில் நடந்த ‘காலப்போல்’ என்பது பொதுஜன அபிப்பிராயத்தை ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் கண்டுபிடிக்கும் முறை. அதன்படி பார்த்ததில், அமெரிக்கர் குடியரசுகளுக்கு இன்னும் அதிசீக்கிரமாக உதவியளிக்க வேண்டுமென்பது அமெரிக்காவின் பொது மக்களின் அபிப்பிராயம் என்று அதனால் நன்றாகத் தெரியவருகிறது.

அமெரிக்காவின் துறைமுகங்களிலுள்ள இடாலிய, ஜெர்மன், டேனிஷ் கப்பல்களைக் கைப்பற்றும்படி பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் உத்தரவிட்டிருக்கிறார். அவைகள் பிரிட்டனுக்குக் கொடுக்கப்படலாம்.

அமெரிக்காவிலிருந்து அநேக யுத்த சாமான்கள் பிரிட்டனுக்கு சீக்கிரத்தில் அனுப்பப்படும். அவைகளுள் ‘டார்பீடோ’ என்ற சப்மரீன் வெடிகுண்டுப் படகுகளும் அனுப்பப்படும்.

120 முதல் 140 வரை அமெரிக்காவின் கப்பல்கள், பிரிட்டிஷ் ரிஜிஸ்தருக்கு மாற்றப்படும் என்று தெரிகிறது.

### 4. கிரீசும், இடலியும்.

சென்ற வாரம், கிரேக்கர்கள் இரண்டு இடாலியத் தரைப்படைகளை முழுவதும் முறியடித்துவிட்டார்கள். இந்தப் போர் அவூஸ் என்ற நதிக்கருகாமையில் நடந்தது. நூற்றுக்கணக்கான இடாலியர்கள் உயிரிழந்தும், காயப்பட்டும், மலைச்சாரலில் விழுந்து கிடந்தார்கள்.

பகைவர்களுடைய இரண்டு ஆகாய விமானங்கள், கிரேக்கர்களுடைய விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

இடாலியர்களுடைய யந்திரசாலைகளின்மேல் வெற்றிகரமான வெடிகுண்டுகள் கிரேக்கர்களால் போடப்பட்டன. இடலிய வெடிகுண்டு சாலைகள் மேலும், ராணுவ ‘சப்ளை’ பண்டக சாலைகள் மேலும் வெடிகுண்டுகள் போட்டுவிட்டு, கிரேக்க விமானங்கள் நஷ்டமில்லாமல் திரும்பிவந்து சேர்ந்தன.

கிரேக்க அரசாங்கத்தாரோடு, பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி மிஸ்டர் ஈடனும், ஜெனரல் சர்ஜான் டில்லும் கலந்து பேசினார்கள். பால்கன் பிரதேசத்தில் யுத்தம் பரவவிடாதவாறு செய்தால் நலம் என்று அவர்கள் கிரேக்க அரசாங்கத்தாருக்குக் கூறினார்கள்.

முசலோனிக்கு சுவிட்சர்லாந்து பாங்கிகளில் ஏராளமான பணம் இருந்ததென்றும், அவைகள் தென்னமெரிக்காவில் உள்ள சிலி, பெரு மாகாண பாங்கிகளுக்கு, யுத்தத்தின்பிறகு, மாற்றப்பட்டதென்றும், இடலியின் அயல்நாடு மந்திரியும், முசலோனியின் மருமகப்பிள்ளையுமான கவுண்ட் சியானோவும் தன்னுடைய பணத்தை பிரேசிலுக்கு அனுப்பிவிட்டதாகவும், லண்டன் பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

### 5. பால்கன்ஸ்.

யூகோஸ்லாவியாவில் அரசியல் மாறுதலை ஏற்படுத்தி, அந்நாட்டரசாங்கத்தைத் தானே வகித்த இளஞ்சிறுவர் அரசர் பீடர், அரண்மனையில் பலர் முன்னிலையில், மக்கள் விசுவாசப்பிரமாணம் செய்தார். பின்பு மாதாகோயிலில், ஒரு ஆசீர்வாதப் பிரார்த்தனை நடந்தது. அரசர் பீடர் பிரார்த்தனைக்குப் போகும்போதும், பிரார்த்தனையிலிருந்து வரும்போதும், பெருங்கூட்டமான மக்கள் சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்தார்கள். பெல்கிரேடில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகரும், அமெரிக்கா ஸ்தானீகரும் வரும்போது, பாதைகளின் இருபக்கங்களில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்த கூட்டம் தன்னுடைய மகிழ்ச்சிப்பெருக்கை ஆரவாரத்துடன் தெரிவித்துக்கொண்டது.

புதிய பிரதம மந்திரி, ஜெனரல் சிமாவீச், உள் நாட்டில் கலவரமின்மையும், வெளியில் சமாதானமும் நிலவவேண்டுமென்று, ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

யூகோஸ்லாவியா முற்றுகை போடப்பட்ட நிலையிலிருப்பதாக நடந்துகொள்ளவேண்டுமென்றும், அரசாங்கத்தார் இட்ட கட்டளைகளுக்கு உடனே கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும், “அயல் தேசத்தினர்” நாட்டு நிலைமையைத் தங்களுடைய சௌகரியத்துக்கு உபயோகித்துக்கொள்வதைத் தடுக்க வேண்டுமென்றும், சுவரொட்டிகள் மூலமாகவும், ரேடியோ மூலமாகவும் அறிவிக்கப்பட்டதென்று ஒரு செய்தி வெளிவந்தது. பின்பு பெல்கிரேடிலிருந்து அச்செய்தி மறுக்கப்பட்டது.

பொது மக்களின் அபிப்பிராயம் அச்சு ஒப்பந்தத்துக்கு எதிரிடையாக இருக்கிறதென்றும், ரஷ்யாவுடன் நேசப்பான்மையான உறவுகொள்ளவேண்டுமென்றும், பகிரங்கமாகச் செய்யப்பட்ட பொதுக் கிளர்ச்சி ஆரவாரத்திலிருந்து தெரிகிறது. ரஷ்யா புதிய அரசாங்கத்தைப் பாராட்டி ஒரு தந்தியனுப்பியிருக்கிறது. ஈஜிப்டின் அரசர் பரூக், அரசர் பீடருக்கு ஒரு பாராட்டுத் தந்தி அனுப்பியிருக்கிறார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை, யூகோஸ்லாவியாவுக்கும், ஜெர்மனியின் மாகாணமாகிய ஆஸ்டிரியாவில் உள்ள ஸ்டிரியாவுக்கும் இடையில் உள்ள எல்லையை, யூகோஸ்லாவியா அரசாங்கம் மூடிவிட்டதென்று ஜெர்மன் அறிவித்தது. யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த குரோஷியாவில் உள்ள ஜெர்மனியர்கள் நாட்டை விட்டுப்போகும்படி சொல்லப்பட்டார்கள். பிரத்தியேகமான முதல் ‘ஸ்பெஷல்’ ரயில் வண்டியில் 800 ஜெர்மனியர்கள் வெளியேறினார்கள். இடாலியப் பத்திரிகை நிருபர்களும், பொதுவாக எல்லா இடாலியர்களும், யூகோஸ்லாவியாவை விட்டு நீங்கிப்போய் விட்டார்கள்.

ராணுவத்தைச் சேர்ந்த எல்லா வகுப்புச் சிப்பாய்களும், எச்சரிக்கை நிமித்தமாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். பெல்கிரேடில் உள்ள ஜெர்மன் ஸ்தானீகர் காரியாலயத்தில் உள்ள ரகசிய காகிதங்கள், தஸ்தாவேஜுகள் முதலியவற்றை ஜெர்மனியர்கள் கொளுத்திவிட்டார்களென்றும், பெல்கிரேடில் இருந்த ஜெர்மன் ஸ்தானீகர், வான்ஹீரான், பர்லினுக்குப் போகுமுன் 1,100 ஜெர்மனியர்களை ரயிலில் அனுப்பினாரென்றும், பெல்கிரேடைவிட்டு ஜெர்மானியர்களெல்லாம் போய்க்கொண்டே இருக்கிறார்களென்றும், இப்போது யூகோஸ்லாவியாவின் ராணுவத்தைக் கலைத்து, அச்சு ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டு, ஜெர்மானியர்களுக்கு அரசியல் மாறுதல் சம்பந்தமாக நடந்த கிளர்ச்சிகளில் ஏற்பட்ட சொத்து நஷ்டத்துக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று ஜெர்மனி கேட்கிறதென்றும், இதெல்லாம், செக்கோஸ்லவாக்கியா, போலந்து ஆகிய நாடுகளைத் தாக்குவதற்கு முன் ஜெர்மனி பின்பற்றிய முறையென்றும், செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

சென்ற வெள்ளிக்கிழமை வெளியான செய்திகளில், ஜெர்மானியர்கள் யூகோஸ்லாவியாவை அதிசீக்கிரம் தாக்கக்கூடுமென்றும், யூகோஸ்லாவியா தன்னுடைய சுதந்தரத்தைப் பாதுகாக்கச் செய்ய வேண்டிய முயற்சிகளை எல்லாம் செய்து போருக்குத் தயாராயிருக்கிறதென்றும், ரஷ்யாவுக்கும் யூகோஸ்லாவியாவுக்கும் நெருங்கிய நட்பு ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படுகிறதென்றும், அதற்காக விசேஷப் பிரதிநிதிகள் மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களென்றும் தெரிகிறது.

### 6. கப்பல் நிலைமை.

பிரிட்டிஷ் சப்மரீன் ' பார்த்தியன் ', டகைவர்களுக்காகப் போய்க்கொண்டிருந்த யுத்த சாமான்களைப் பாதுகாக்க உடன்சென்ற ' கான்வாய் ' கப்பல்கள் இரண்டை தைரியத்துடன் தாக்கி, முழுகடித்து விட்டது. அவைகளில் ஒன்று 10,000 டன் எடையுள்ள ' டாங்கர் ' கப்பல். மற்றொன்று 6,000 டன் எடைஉள்ள கப்பல்.

பிரிட்டிஷ் கடற்படை மந்திரிசபை வெளியிட்ட அறிக்கையில், பிரிட்டிஷ் கப்பற்படை நஷ்டம் சென்ற வாரத்தில் மிகவும் குறைந்திருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறது.

பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் பிரிட்டனுக்குக் கப்பல்கள் இன்னும் அதிகமாக அனுப்புவதைப்பற்றி கப்பல் கமிஷன் தலைவர் அட்மிரல் லாண்டுடன் பேசினார். 700 கோடி டாலர் மதிப்புள்ள பிரிட்டிஷ் உதவி திட்டத்தில் சுமார் 63 கோடி கப்பல்களுக்காகவும், 20 கோடி பழுதடைந்த கப்பல்களை ரிபேர் செய்வதற்காகவும் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கிற விஷயத்தைப்பற்றிப் பேசப்பட்டதென்று அட்மிரல் லாண்டு பத்திரிகை நிருபர்களுக்கு அறிவித்தார்.

### 7. ஜப்பானும் சைனாவும்.

தெற்கு சைனாவில், குவான்டங் என்ற இடத்தில், ஜப்பானியப்படை கப்பலிலிருந்து இறங்கி, ஒரு குறிப்பான லட்சியத்தை நோக்கிப் போயிற்றென்றும், சீன தேசத்தினர் அதை எந்த விதமாகவும் தடுக்கவில்லையென்றும் தெரிகிறது.

ஜப்பானியர்களால், நான்கிங்கில் நடத்தப்படும் சீன அரசாங்கத்தின் முதல் ஆண்டுவிழா மார்ச்சுமீ 30உ யாகும். அதைக்குறித்து ஜப்பானியப் பத்திரிகைகள் எழுதும்போது, நான்கிங் அரசாங்கம் எப்படிப்பட்ட கஷ்டங்களுக்கிடையே நடந்துவருகிறதென்பதை மறக்காமல், அரசாங்கத்தை எப்படி பலப்படுத்துவது, நாட்டின் உணவுப் பொருள் குறைவை எப்படி நிவர்த்திசெய்வது என்பதுபோன்ற விஷயங்களைப்பற்றி விளக்கிக் காட்டுகின்றன.

### 8. விஷி.

அல்ஜீரியாவின் கரையோரத்திலிருந்து பிரெஞ்சு கப்பல்களுக்கும், பிரிட்டிஷ் கடற்படைக்கும், ஒரு சிறிய சண்டை நடந்தது. அதுசம்பந்தமாக, அமெரிக்கா அரசாங்கத்துக்கு தன்னுடைய எதிர்ப்பை விஷி அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. பொருளாதார கடல் முற்றுகையை எந்த விதத்திலும் தளர்த்துவதாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எண்ணமில்லையென்று ராய்டர் நிருபர் கூறுகிறார்.

விஷி அரசாங்கத்தின் தந்திரமான ஏற்பாடுகள் சமீபத்தில் பிடித்த இரண்டு பிரெஞ்சு கப்பல்களில் இருந்த சாமான்களால் வெளியாயின. பட்டினி கிடக்கும் பிரான்சு தேசத்துக்கு உணவுப் பொருள் கொண்டுவருகிறோம் என்று சொல்லிக்கொண்டு இதர சாமான்களையும் கொண்டுவருவதைக் கையுங் களவுமாக பிரிட்டிஷ் கடற்படை பிடித்துவிட்டது. ஒரு கப்பலில் நிறைய வாழைப் பழங்களும், மற்றொரு கப்பலில் 10 லட்சம் லிட்டர் அளவுள்ள ரம் என்ற சாராயமும், 250 டன் அன்னாசிப்பழங்களும் அகப்பட்டன. யுத்த காலத்தில் இவைகள் அவசியம் வேண்டிய பொருள்களாகக் கருதுவதற்கில்லை ; சுகபோகப் பொருள்களாகத்தான் கருதவேண்டும். இதன்மூலம் விஷி அரசாங்கம் பிரிட்டிஷ் பொருளாதார முற்றுகையை ஏமாற்றுவதற்கு முயற்சி செய்கிறது என்று தெரிகிறது.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

நார்வே தேசத்தில், ஹிட்லருடைய பிரதிநிதியாகிய டர்போவன், ராணுவச் சட்டம் அமுலில் இருக்கும் என்று விளம்பரப்படுத்தியதாகவும், அந்தச் சட்டம் மிகக் கொடூரமான முறையில் கையாளப்பட்டுவருவதாகவும், ஜெர்மன் ராணுவக் கோர்ட்டுகள் கேசுகளை விசாரித்து, தீர்ப்பு சொல்லுகின்றனவென்றும், இந்த ஏற்பாடு ஹேக்கு கன்வென்ஷன் முடிவுக்கு விரோதமானதென்று நார்வே அரசாங்க சட்டநிபுணர் அபிப்பிராயப்படுகிறாரென்றும், செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

பல்கேரியாவில், ஜெர்மன் துருப்புகளுக்கும், பல்கேரிய மக்களுக்கும் தகராறு ஏற்பட்டு ஒரு சிறு சண்டை நடந்ததாகத் தெரிகிறது.

ருமேனியாவில் நாஜிகளுக்கு எதிரிடையாக உள்நாட்டுக் கலகம் ஏற்படக்கூடும் என்று மாஜி ருமேனிய மந்திரி திலீயா லண்டன் பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

### 10. நடுநிலைமை நாடுகள்—ஸ்பெயின், ரஷ்யா.

40,000 அரசியற் கைதிகள், ஒரு புதிய சட்டத்தின் கீழ், ஜெனரல் பிராங்கோவால் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது. உள் நாட்டுச் சண்டை நின்ற இரண்டாம் ஆண்டுவிழா சம்பந்தமாக இது செய்யப்படுகிறது. இதற்குமுன் பிராங்கோவுக்கு விரோதமாகப் போர்புரிந்த குடியரசு அரசாங்க ராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய்கள்தான் பெரும்பாலும் இந்தக் கைதிகள். இந்த யுத்த சந்தர்ப்பத்தில் இக் காரியம் நடைபெறுவது நாட்டு ஒற்றுமையின் நோக்கங்கொண்டு செய்யப்படும் காரியமா என்று நினைக்கும்படி இருக்கிறது.

ரஷ்யா யூகோஸ்லவிய அரசாங்கத்தைப் பாராட்டி அனுப்பிய தந்தியும், யூகோஸ்லாவியாவில் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும் என்ற பொது மக்களின் அபிப்பிராயமும், இன்னும் சில இதர விஷயங்களும், ரஷ்யா நடுநிலைமைதாங்கி நிற்கும் காலம் இன்னும் நீடிக்குமா என்று சந்தேகிக்கும்படி இருக்கிறது.

துருக்கி தன்னுடைய சுதந்தரத்தைப் பாதுகாக்க யுத்தத்தில் ஈடுபட்டால், ரஷ்யா நடுநிலைமை வகிக்கும் என்ற ரஷ்ய அறிக்கையைப் பாராட்டி, அயல் நாட்டு உதவிமந்திரி மிஸ்டர் பட்லர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பேசினார். இந்த அறிக்கை மிகவும் சந்தோஷப்படும்படியானது என்று அவர் கூறினார். இம்மாதிரியான விஷயங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும், ரஷ்ய அரசாங்கத்துக்கும் உள்ள தொடர்பை அதிகப்படுத்துமென்று தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

---

## மத்தியதரைக் கடல் யுத்தம்.

மத்தியதரைக் கடல் என்பது ஆப்பிரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில், ஸ்பெயினுக்குக் கிழக்கிலும், துருக்கிக்கு மேற்கிலும் உள்ள ஒரு முக்கியமான கடல். உலக அமைப்பில் இக் கடல் இருப்பதைப் பார்த்தால், உலகத்துக்கே இது ஒரு மத்திய ஸ்தானத்தில் இருக்கிறதென்று தெரியவரும். அதனால் தான் அதற்கு மத்தியதரைக்கடல் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. நாகரீகத்தின் வளர்ச்சிச் சரித்திரத்தில் இக்கடல் பெரும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டன், மத்தியதரைக் கடலின் மேற்கு வாயிற்படியையும், கிழக்கு வாயிற்படியையும் தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது. மேற்கில் ஜிப்ரால்டர் ஜல சந்தியும், கிழக்கில் சூயஸ் கால்வாயும், பிரிட்டனுடைய கையில் இருப்பதால், ஐரோப்பாவிலிருந்து உலகத்தின் இதர பாகங்களுக்குச் செல்லும் வியாபாரப் போக்குவரத்து சாதனங்களைக் காக்கும் பொறுப்பு பிரிட்டனுக்கு இருக்கிறது. ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கிழக்கே செல்லும், ' கேப் ஆப் குட் ஹோப் ' என்னும் நன்னம்பிக்கை முனை வழியையும், சூயஸ் கால்வாய் வழியையும், அமெரிக்காவிலிருந்து மேற்கு ஐரோப்பாவுக்கும் வடக்கு ஆப்பிரிக்காவுக்கும் செல்லும் போக்குவரத்து வழிகளையும், ஜிப்ரால்டர் பாதுகாத்து நிற்கிறது.

மத்தியதரைக் கடலின் கிழக்கே, பிரிட்டன் சிறந்த பலத்துடன் கூடி விளங்குகிறது. எஜிப்டுடன் நேசப் பான்மையான ஒப்பந்தம் செய்து, அலெக்சாண்ட்ரியா என்ற துறைமுகப் பட்டிணத்தில் கடற் படை ஸ்தலமும், ராணுவ ஸ்தலமும், பிரிட்டன் ஏற்படுத்தியிருக்கிறது. கிரீஸ் தேசம் பிரிட்டனோடு நேசங் கொண்டது. டார்டனல்ஸ் ஜலசந்தி, மார்மரோ கடல்,

# ஐரோப்பா
# மத்யதரைக் கடற்கரை பிரதேச
# படம்

அளவு 1 அங்குலம் = 240 மைல்கள்




குறிப்பு

கடற்படைத் தளங்கள்....நேசநாடு    இதாலி......    பிரான்சு......    நடுநிலைமை......

ஆகாயப்படை ,, .....    ,, ......    ,, ......    ,, ......


*Reg. No. 42/2 Copies 9700*

*Heliozinco., Survey Office, Madras 1941.*

பாஸ்பரஸ் ஆகியவை துருக்கியின் ஆதிக்கத்தில் இருக்கின்றன ; துருக்கி பிரிட்டனோடு நட்புக்கொண்ட நாடு. பாலஸ்தீனம், ஈராக், டிரான்ஸ் ஜார்டேனியா, ஆகிய இவைகளின்மேல் பிரிட்டனுக்கு நேசப் பான்மையான ஆதிக்கம் உண்டு. ஹைபா என்ற கடற்படை ஸ்தலம், அதிர்ஷ்டவசமாக, ஈராக் எண்ணெய்க் குழாய்களின் அருகாமையில் இருக்கிறது. இவ்வளவு சௌகரியங்கள் பிரிட்டனுக்கு மத்தியதரைக் கடலில் இருக்கின்றன.

ஆனால், மத்தியதரைக் கடலின் மத்தியில் உள்ள தீவுகளான சிசிலியும், பாண்டலேரியாவும் இடலிக்குச் சொந்தமானவை. கிழக்கு மத்தியதரைக் கடலில் டோடெகனீஸ் தீவுகள் இடலிக்குச் சேர்ந்தவை. இதனால் இடலிக்கு, அதிக காலமாக பிரிட்டனோடு கைகலந்து, மத்தியதரைக் கடலில் இடாலிய ஆதிக்கத்தை நிலை நிறுத்தவேண்டுமென்ற பேராசை இருந்து வந்தது. தன்னுடைய சொந்தக் கடலாக மத்தியதரைக் கடலைச் செய்வதற்கு, இடலி பிரிட்டனுடைய ஆதிக்கத்தை நீக்க முயற்சி செய்தது. ''மத்தியதரைக் கடல் பிரிட்டனுக்குப் பல வழிகளில் ஒரு வழி, ஆனால் இடலிக்கு அது உயிர் நாடியான வழி'' என்பது முசலோனி கூறியது. ஆனால், சந்தர்ப்பம் நேர்ந்தபோது பிரிட்டிஷ் கப்பல்களைக் கண்டதும் திரும்பி ஓடும்படியான இடலியின் கப்பற் படையின் செய்கை விநோதமாக இருக்கிறது.

**இடாலியப்படை முறியடிக்கப்பட்டது.**—சென்ற வாரத்தில் கிழக்கு மத்தியதரைக் கடலில் நடந்த சண்டை ஒரு முக்கியமான விஷயத்தை விளக்கிக் காட்டிவிட்டது. பிரிட்டிஷ் மத்தியதரைக் கடற்படை, அட்மிரல் சர் ஆண்ட்ரூ கன்னிங்காம் தலைமையின் கீழ் இடாலியக் கடற்படையை முறியடித்து, அதற்கு மிகுந்த சேதம் விளைவித்தது. இடாலியக் கப்பல்கள் சண்டை போடாமல் தப்பித்துக்கொண்டு ஓட முயற்சித்தன. நாலாபக்கமும் சிதறி ஓட ஆரம்பித்தன. ஆனால் பிரிட்டிஷ் படையின் யுத்த தந்திரத்தால் அது முடியாமற் போய்விட்டது ; பிரிட்டிஷ் கப்பற் படையும், பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையும் ஏகோபித்துச் செய்த முயற்சியினால், பிரிட்டிஷாருக்கு யாதொரு நஷ்டமுமில்லாமல், இடலிக்குப் பெருத்த நஷ்டம் உண்டாக்க முடிந்தது. மூன்று பெரிய யுத்தக் கப்பல்கள், பியூமி, போலா, சாரா என்ற பெயருடையவை, ஒவ்வொன்றும் 10,000 டன் எடையுள்ளவை முழுகடிக்கப்பட்டன. 1,700 டன், 1,500 டன் எடையுள்ள இரண்டு யுத்தக் கப்பல்கள் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டன. இவையல்லாமல், விட்டோரி வகுப்பைச் சேர்ந்த ஒரு இடாலிய யுத்தக் கப்பல், 35,000 டன் எடையுள்ளதும், ஒன்பது 15 அங்குல பீரங்கிகளும், பன்னிரண்டு 6 அங்குல பீரங்கிகளும், 12 விமான எதிர்ப்பு பீரங்கிகளும், மூன்று ஆகாய விமானங்கள் தாங்கிச் செல்வதற்கு வசதிகளும் உள்ள பிரம்மாண்டமான யுத்தக்கப்பல், பிரிட்டிஷ் கப்பல்களால் தாக்கப்பட்டு பல இடங்களில் பழுதுண்டாகும்படி செய்யப்பட்டது. யுத்தக் கப்பல்கள் அதிவேகமாகச் செல்வது என்ற நோக்கத்துக்கு இடாலியர்கள் அதிக மதிப்புக் கொடுத்தார்களே ஒழிய, கப்பல் பலத்திற்கும், பீரங்கிகள் சுடும் பலத்திற்கும் கொடுக்க வேண்டிய முக்கிய மதிப்பு, கப்பல் கட்டும்போது கொடுக்கவில்லை. இருந்தபோதிலும் தங்களுடைய சொந்த 'ஏரி' யாக மத்தியதரைக் கடலை நினைக்க விரும்பும் இடாலியர்கள் சண்டை போடுவதற்குக்கூட முடியவில்லை என்பதிலிருந்தே அவர்களுடைய நிலைமை நன்றாகத் தெரிகிறது.

**பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையும், ஜெர்மன் ஆகாய விமானப் படையும்.**—பிரிட்டிஷாரைத் தடுப்பதற்கு, இடாலியர்கள் தங்களுடைய கடற்படையை மாத்திரமல்லாமல், ஆகாய விமானப் படையையும் உபயோகப்படுத்த எண்ணினார்கள். ஆனால் அவர்களுடைய எண்ணங்களெல்லாம் தலைகீழாய்விட்டன, ஏனென்றால், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, கிரேக்கர்கள் அல்பேனியாவில் போர் புரிந்தபோதும், வடக்காப்பிரிக்கா யுத்த அரங்கத்திலும், இடாலிய விமானப்படையைத் துவம்சம் செய்துவிட்டது. இடாலியர்களுடைய விமானப் படைத்தளங்கள், விமானச்சாலைகள், இவைகள் மேல் இடைவிடாது வெடிகுண்டுகள் போட்டு, பிரிட்டிஷ் விமானப்படை இடலியின் ஆகாய பலத்தை அடக்கிவிட்டது. ஆகையால், இடாலியர்கள் ஜெர்மானியர்களுடைய உதவியை நாடும்படியாய் விட்டது. சிசிலித் தீவில் கடேனியா என்ற இடத்தில் சில ஜெர்மானிய ஆகாய விமானங்கள் இடலிக்கு உதவியாகத் தங்கியிருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. பிரிட்டிஷ் கடற்படையின் ஸ்தலமாகிய மால்டாவை அடிக்கடி இந்த ஜெர்மன் விமானங்கள் தாக்கியபோதிலும், பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களும் பாதுகாப்புக் கப்பல்களும் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருப்பதைத் தடைசெய்ய முடியவில்லை. பிரிட்டிஷ் கப்பல்கள் ஒன்றிரண்டிற்குச் சிறிது சேதம் விளைவித்தற்குப் பதிலாக, பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை ஜர்மென் விமானப் படைக்கு, பெருஞ் சேதம் விளைவித்தது. ஆகாயச் சண்டையிலும், கடோனியா என்ற இடத்தைக் கடுமையாகத் தாக்கியதிலும், நூற்றுக்கணக்கான ஜெர்மன் விமானங்கள் அழிக்கப்பட்டன. பிரிட்டிஷ் கடற்படை மத்தியதரைக்கடலில் தடையில்லாமல் தான் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டு வருகிறது. ஜெர்மன் விமானங்களாயிருந்தாலும் சரி, இடாலிய விமானங்களாயிருந்தாலும் சரி, இந்தச் சனியன்களை ஆகாயத்திலிருந்து அடியோடு சுட்டொழிக்கவேண்டும் என்று அட்மிரல் கன்னிங்காம் கூறியது பிரிட்டிஷ் படையின் மனவுறுதியைக் காண்பிக்கிறது.

**பிரிட்டிஷ் கப்பற் படையின் சிறப்பான பலம்.**—பிரிட்டிஷ் கப்பற் படை மத்தியதரைக்கடலில் சிறப்பான பலத்தோடு விளங்கிக்கொண்டிருக்கிறது. சிசிலியின் கால்வாயின் வழியாக, ஜெர்மன் வெடிகுண்டு விமான எதிர்ப்புகளைத் தாண்டி, பிரிட்டிஷ் பாதுகாப்புக் கப்பல்கள் போய்க் கொண்டுதான் இருக்கின்றன. சமீபத்தில் வலோனா என்ற இடத்தைக் கடற் படை தாக்கியபோது, ஒட்ராண்டோ ஜலசந்தியைத் தாண்டி பிரிட்டிஷ் கப்பல்கள் போகக்கூடும் என்ற விஷயம் நன்றாகத் தெரிய வந்தது. டாரன்டோ என்ற இடலியின் கப்பல் தளத்தைத் தாக்கியபோது, பிரிட்டிஷ் கப்பற் படையும், கப்பல் துணைப்படையான ஆகாய விமானப் படையும், கப்பற் சண்டையில் ஒரு நல்ல படிப்பினையைக் கற்றுக் கொடுத்தன. கவூர் என்ற யுத்தக் கப்பலையும், இதர கப்பல்களையும் முழுகடித்தும், சேதம் விளைவித்தும், கடலில் தனக்கிருக்கும் சிறப்பான பலத்தை, பிரிட்டிஷ் கடற்படை காண்பித்தது ; ஜினோவா என்ற துறைமுகப் பட்டணத்தைத் தாக்கி, ஏராளமான சேதம் விளைவித்தது. முதலில் இடலியைவிட குறைந்த படையை பிரிட்டன் வைத்திருந்தும், மத்திய தரைக்கடலில் பிரிட்டன் தான் தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தது.

**ஒட்ராண்டோ ஜல சந்தி :**—ஒட்ராண்டோ ஜல சந்தி 45 மைல் அகலமுள்ளது. கரையோரத்திலிருந்து பிரிட்டிஷ் கப்பல்களைச் சுடுவதற்கு முடியாது. இடாலியக் கப்பல்களும் இருட்டில் 3 அல்லது 4 மணிக்குள் இடலியிலிருந்து, யூகோஸ்லாவியாவின் கரையோரமாகிய டால் மேஷியாவுக்கு, வெனிஸ் அல்லது டிரீஸ்டு என்ற கடற்கரைப் பட்டணங்களிலிருந்து போவதற்குச் சௌகரியம் உண்டு. அநேக சிறு தீவுகள் இருப்பதால் அவைகளிடம் மறைந்து மறைந்து அல்பேனியாவிலுள்ள, இடலியின் கைவசத்திலிருக்கும், துராசோ அல்லது வலோனாவுக்குச் சென்று, சாமான்களையோ அல்லது மனிதர்களையோ இறக்கி விடலாம். இம்மாதிரி போவதைத் தடுப்பது இயலாத காரியம். ஆனால் டிபலேனியைப் பிடித்துக்கொண்டு வலோனாவை நோக்கிப்போகும் கிரேக்க சேனைகள் மாத்திரம் வலோனாவைக் கைப்பற்றிக்கொண்டால், பிரிட்டிஷ் கடற்படை அந்த இடத்தை இடலிக்கு எதிராக ஒரு கப்பல் தளமாக உபயோகப்படுத்த முடியும். அப்போது, வலோனா முசலோனிக்கு எவ்வளவு நன்றாக உபயோகப்பட்டதோ, அதற்கு மேல் நன்றாக பிரிட்டிஷாருக்கு உபயோகப்படும். ''பிரிட்டன் முதல்தரமான கப்பற் படையுள்ள வல்லரசு ; அதனுடைய கப்பல் தலைவர்கள் அக்கப்பற் படையின் பலத்தை நன்றாக உபயோகிக்க அறிந்தவர்கள்'' என்று கூறப்பட்டிருக்கிறது.

டெபலீனி எவ்வளவு முக்கியமானதென்பதை முசலோனி உணர்ந்ததால்தான் அதைப் பாதுகாக்க ஏராளமான இடாலியப் படைகள் உயிரிழக்கும்படி நேர்ந்தது. டெபலேனிக்கும் வலோனா என்ற துறைமுகத்துக்கும் இடையில் 30 மைல் நீளமுள்ள முதல் தரமான ரோட்டு இருக்கிறது. கிரேக்கர்கள் டெபலீனியை நோக்கி முன்னேறி வருவதைத் தடுக்க முயற்சித்ததில் 20,000 இடாலியர் உயிர் துறந்தார்களென்றும், முசலோனி அல்பேனியப் போரரங்கத்துக்கு வந்த பிறகு 2,000 பேர் கொல்லப்பட்டும், 8,000 பேர் காயமடைந்துமிருக்கிருர்கள். வலோனுவைக் கிரேக்கர்கள் பிடித்து விட்டால், அந்தப் பாகத்தில் இடலியின் பலம் மூன்றில் ஒரு பங்காகிவிடும் ; கிரேக்கர்களுக்கு கடல் மூலம் உதவி வருவதற்கு மிகவும் சௌகரியமாயிருக்கும்.

**ஆகாய விமானப் படையும் கடற் படையும்.**

முடிவாக மகிழ்ச்சிக்குரிய ஒரு விஷயம் என்னவென்ருல், மத்தியதரைக்கடலில் பிரிட்டனுக்கு இருக்கும் ஆதிக்கத்துக்கு எதிராக போட்டி போடுவதற்கு ஜெர்மனியால் முடியாதென்பதுதான். அப்படிச் செய்தாலுங்கூட, இடலியையும், சிசிலியையும் தங்குமிடமாக உபயோகிக்க ஆகாய விமானங்கள் மூலமாகத்தான் முடியும் ஆனல் இந்த இடங்களில் பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை நன்ருகத் தாக்கிக் கொண்டிருக்கிறது. ஆப்பிரிக்கா, அல்பேனியா, டோடெகனீஸ் அல்லது சார்டீனியா இவைகளிலிருக்கும் விமானப் படை தண்டு தளவாடங்கள் எல்லாவற்றையும் ஜெர்மனி உயயோகப்படுத்த முடியாத நிலைமையிலிருக்கிறது. உபயோகப்படுத்துவதென்ருல், அவைகளத்தனையும் கடலைத்தாண்டிக் கொண்டு வரவேண்டும் ; ஆனல் பிரிட்டிஷ் கடற்படை இதற்கு இடங்கொடுக்காது.

அல்பேனியாவுக்கும், லிபியாவுக்கும், இடலியிலிருந்து போகும் கப்பல்களை முழுவதும் நிறுத்த முடியாதென்ருலும் அவைகளுக்கு எவ்வளவு தொந்தரவு கொடுக்கவேண்டுமோ அவ்வளவு தொந்தரவு கொடுக்கலாம். சப்மரீன் கப்பல்கள் மூலமாகவும், ஆகாய விமானங்கள் மூலமாகவும் இடலியின் கப்பல்களுக்குத் தீங்கு விளைவிக்கலாம் சமீபத்தில் இடலியின் “ சப்ளை ” கப்பல்கள் இரண்டு முழுகடிக்கப்பட்டதாக செய்தி வெளிவந்திருக்கிறது. அதன் பின் சென்ற மார்ச்சுமீ 20உ இடலியின் வேறு இரண்டு “ சப்ளை ” கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. வலோனு மேலும், துராசோ மேலும் “ டார்பிடோ ” வெடிகுண்டுகள் பிரிட்டிஷ் படையினல் போடப்பட்டதன் பயனுக பகைவர்களுடைய யுத்தக் கப்பல் ஒன்று தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது.

**ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் வெற்றிகள்.**

கடைசியாக ஒரு விஷயம் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜிப்ரால்டரும், சூயசும் பிரிட்டனுடைய கையிலிருப்பதால் பகைவர்களுடைய கப்பல்கள் மத்தியதரைக் கடலுக்குள் வருவதென்ருல் வழியடைக்கப்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்காவில் பிரிட்டன் அடைந்த வெற்றிகளினல் நீண்ட கரையோரம் பிரிட்டனுடைய ஆதிக்கத்தில் இருக்கிறது. இடாலியர்கள், “ நான்கு மூலை நெருப்புச் சதுரம் ” தங்களிடம் இருப்பதாக, பெருமை பராட்டினர்கள். டரான்டோ, டிரிபோலி, டோபுருக், லீரோ ஆகிய இவைகள்தாம் அந்த நான்கு மூலைகள். ஆனல் இப்போது பிரிட்டன் டோபுருக்கைப் பிடித்துவிட்டது ; அதன் கப்பற்றுணைப் படையான விமானப் படை, டரான்டோ இடாலிய கப்பல் தளமாயிருப்பது எவ்வளவு அபாயகரமானதென்பதை ருசுப்படுத்திக்கொண்டு வருகிறது; டிரிபோலிமேலும், லீரோமேலும் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை தினந்தோரும் வெடிகுண்டுகளைப் போட்டுக்கொண்டிருக்கிறது.

டார்டனல்ஸ் ஜல சந்திக்கு கிரீசின் மூலமாக ஒரு குறுக்கு வழி கண்டுபிடிக்க வேண் மென்று இடலி முயற்சித்தது. அம்முயற்சி பெறுத்த நஷ்டங்களைக் கொண்டுவந்ததே ஒழிய, வெற்றி கொண்டு வரவில்லை. கிரீசோடு தொடுத்த போரினல் இடலி அவமானப்பட்டது ; அல்பேனியாவிலுள்ள அதனுடைய துறைமுகங்கள் அல்லாடிக்கொண்டிருக்கின்றன, ஈஜிப்டைக் கைப்பற்ற இடலி செய்த முயற்சி அலெக்சாண்ட்ரியாவில் பிரிட்டனுக்கு இருக்கும் கப்பல் தளத்தின் வலிமையால் தலையெடுக்க முடியாமல் செய்யப்பட்டது. லிபியாவின் துறைமுகங்களாகிய பார்டியா, டோபுருக், பென்காசி இவைகளை இடலி இழந்துவிட்டது. டிரிபோலியினுடைய உபயோகங்கூட மிகக் குறைந்துவிட்டது. வெளியிலிருந்து வரும் எண்ணெய் இறக்குமதிகள் பிரிட்டிஷ் கடற்படையினல் தடுக்கப்பட்டன. இந்த நிலைமையில், மத்தியதரைக் கடலில் தலைமை ஸ்தானம் பெற்ற பிரிட்டனின் பலத்தைக் குறைக்க இடலியால் முடியவே முடியாது.


கடைசியாக நடந்த அயோனியன் கடல் யுத்தத்தில், இந்த உண்மை இன்னும் பலமாக ருசுப்படுத்தப்பட்டது மார்ச்சுமீ 28உ காலை லிட்டோரியோ வகுப்பைச்சேர்ந்த ஒரு பெரிய இடாலிய யுத்தக்கப்பலும், குருய்சர் என்ற சில யுத்தக் கப்பல்களும், கிரீட் என்ற தீவுக்குத் தென்மேற்கில் போய்க்கொண்டிருந்ததை பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பார்த்துவிட்டன. இந்த சமாச்சாரம் அறிவிக்கப்பட்ட உடனே, கிரேக்கர்களின் கடற்படை பிரிட்டிஷ் கடற்படையுடன் சேர்ந்துகொண்டு தயாராயிருந்தது. லிட்டோரியோ வகுப்பு யுத்தக் கப்பல் பிரிட்டிஷ் ‘ டார்பிடோ ’க்களினல் தொடர்ந்து தாக்கப்பட்டது. யுத்தக்கப்பலின் பல பாகங்கள், வெடிகுண்டுகளின் வெடிப்பினல் பழுதடைந்து, அதனுடைய வேகமும் குறைந்தது, பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையேலிருந்து யுத்தக் கப்பல்களை வெடிகுண்டுகளினல் தாக்கியது. ஆகாய விமானத் தாக்குதல்களினல் கப்பல் வேகங்குறைந்ததும், பிரிட்டிஷ் கப்பற்படையின் பளுவான கப்பல்கள் பகைவர்களைச் சந்திப்பதற்குப்போதுமான அவகாசம் கிடைத்தது. இதற்குள் இரவு வந்துவிட்டது ; இருட்டு சூழ்ந்துகொண்டது. இருட்டில் பலமான யுத்தம் நடந்தது. இடாலிய யுத்தக்கப்பல்களான, போலா, சாரா, பியூமி, பிரிட்டிஷ் வெடிகுண்டுகள்பட்டு நெருப்புப் பற்றிக்கொண்டன. இந்த மூன்று கப்பல்களும் பின்பு முழுகடிக்கப்பட்டன. இதர இடாலியக் கப்பல்களும் தாக்கப்பட்டன. வின்சென்சோ கியூபடி என்ற பெரிய யுத்தக்கப்பலும். மேஸ்டிரேல் என்ற சிறிய யுத்தக்கப்பலும் முழுகடிக்கப்பட்டன ஆறு அங்குல பீரங்கியுள்ள குளோவானி டெல்பண்டி என்ற யுத்தக்கப்பலும் முழுகடிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அடுத்த நாள் காலை, அதாவது மார்ச்சுமீ 29உ ஒரு ஆயிரம் இடாலியர்கள் கடலிலிருந்து தப்புவிக்கப்பட்டார்கள். இன்னும் 200 அல்லது 300 பேர் கூட தப்புவிக்கப்பட்டிருக்கலாம் ; ஆனல் அவர்களைத் தப்புவிப்பதற்காக முயற்சி செய்துகொண்டிருக்கும்போது, ஜெர்மன் ஆகாய விமானங்கள் வெடிகுண்டுபோட ஆரம்பித்தன. தப்புவிக்கப்பட்டவர்களில் ஒருவர் போலா என்ற இடாலிய யுத்தக்கப்பலைச் சேர்ந்த காப்டன் டெஸ்பீசி என்பவர். ஸ்குவாட்ரன் என்ற யுத்தக்கப்டலின் அட்மிரல் கானேனி அகப்படவில்லை.

இந்த அயோனியன் கடல் யுத்தத்தின் தனிச்சிறப்பு என்னவென்ருல், பிரிட்டனின் ஒரு யுத்தக்கப்பல் கூட சேதம் அடையவில்லை ; ஒரு கப்பலோட்டிகூட உயிரிழக்கவில்லை.

இடாலியால் பிரிட்டிஷ் கப்பற்படையைத் தோற்கடிக்க முடியாதென்று கண்டு, ஜெர்மனி சில தந்திரங்களைச்செய்ய முயற்சித்தது. ஜிப்ரால்டரைத் தாக்கும்படி ஸ்பெயினை தூண்டிவிட்டது ; ஆனல் ஜிப்ரால்டரை ஜெயிப்பது முடியாத காரியமென்றும், அம்மாதிரி முயற்சி ஏதாவது செய்தால் ஸ்பெயின் தீபகற்பமே பிரிட்டிஷ் கப்பற்படையால் தாக்கப்படும் என்பதை ஸ்பெயின் தேசத்தினர் உணர்ந்திருக்கிருர்கள். பீசர்டா முதலிய ஆப்பிரிக்க தளங்களை தனக்கு விட்டுக்கொடுக்கும்படி ஜெர்மனி பிரான்சு தேசத்தை கேட்டது ; டார்டனல்லைப் பாதுகாக்கும் துருக்கி பிரிட்டனேடு நட்புரிமை கொண்டாடுவதை நிராகரிக்கவேண்டுமென்றும் ஜெர்மனி முயற்சித்தது. அதனுடைய முயற்சி பயன பெறவேயில்லை.

இதனல், முடிவில் மத்தியதரைக்கடல் யுத்தத்தில் யார் ஜெயிப்பார்கள் என்பதைப்பற்றிக் கொஞ்சங்கூட சந்தேகத்திற்கிடமில்லை ; பிரிட்டன்தான் கட்டாயம் ஜெயிக்கும்.

# எரீட்ரியா யுத்தத்தை விளக்கும் படம்.




## ஆப்பிரிக்காவில் இந்தியத் துருப்புகள்.

மாட்சிமை தங்கிய மன்னர் பெருமான், சில வாரங்களுக்கு முன்பு, மேன்மை தங்கிய வைஸ்ராய்க்கு, இந்தியா யுத்த முயற்சிக்காகச் செய்துவரும் உதவியைப் பாராட்டி, ஒரு செய்தி அனுப்பினர். ஏகாதிபத்திய யுத்த உதவி வெள்ளத்திற்கு, இந்தியா சதாகாலமும் ஓடும்படியான ஆறுபோல மனிதர்கள், பணம், யுத்த சாமான்கள் ஆகிய உதவியைச் செய்துகொண்டு வருவதற்காக மன்னர் பிரான் இந்திய நாட்டு மன்னர்களுக்கும் இந்திய மக்களுக்கும் தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்தார். மேலும், யுத்த அரங்கங்களில் பேர்போன இந்தியா, இந்த யுத்தத்தில் வெவ்வேறிடங்களில் மெச்சத் தகுந்தமாதிரி போர் புரிந்தார்களென்றும், இதல்லாமல், யுத்தத்தின் காரணமாக இதர நாடுகளில் மக்கள் கஷ்டப்படுவதை நீக்கவேண்டி, கஷ்டநிவாரண நிதிக்கு இந்தியா தாராளமாக உதவியிருக்கிறதென்றும், மன்னா பிரான் மகிழ்ச்சியுடன் கூறியிருக்கிறார். கிழக்கே சிங்கப்பூரை இந்தியத் துருப்புகள் பாதுகாத்து வருகின்றன. கிழக்கே சில பேர்போன இந்தியப் பட்டாளங்கள் சர் ராபர்ட் புரூக் பாப்பம் என்பவரின் தலைமையின்கீழ் போர் புரிந்துகொண்டிருக்கின்றன என்ற விஷயம் இந்த வாரத்தில்தான் தெரியவந்தது. இந்தப் பட்டாளங்கள் இந்தியாவுக்கு அழியாப் புகழையும், தங்களுக்குப் பேரும், பெருமையும், கொண்டு வரும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. உதாரணமாக, ஆப்பிரிக்காவில் பிரிட்டனுக்குக் கிடைத்த பெரும் வெற்றிகளில், இந்திய சிப்பாய்கள் ஒரு முக்கியமான அளவுக்கு உதவி செய்திருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பட்டாளங்களுள் இந்திய சிப்பாய்கள் செய்த சில வீரத்தனமான செய்கைகளைப்பற்றிய விவரங்கள் இப்போது கிடைத்திருக்கின்றன. அவர்கள் எரீட்ரியாவின் எல்லையோரத்திலுள்ள கசாலாவிலிருந்து, மிகுந்த பந்தோபஸ்தாகக் கட்டப்பட்ட கேரன் கோட்டையருகில் வந்து, அதாவது எரீட்ரியாவுக்குள் 100 மைல் பிரவேசித்து, பிறகு விடாமுயற்சியுடன் போராடி, அந்த கேரன் என்ற முக்கியமான பட்டணத்தைப் பிடித்து, பின்னர் எரீட்ரியாவின் தலைநகரான அஸ்மாராவைப் பிடித்து, பகைவர்களைக் கடலுக்குத் துரத்திவிடுவதற்கு, பேருதவி செய்தார்கள்.

எரீட்ரியாவில் பிரவேசித்தபோது, பிரிட்டிஷ் துருப்புகள் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொன்றிலும் அதிகப்படியான எண்ணிக்கையுள்ள இந்தியர்கள் இருந்தார்கள். ஒன்று நேராக அகார்தத் என்ற இடத்துக்குப் போயிற்று; மற்றொன்று தெசானி, பரெண்டு பிரதேசமாகிய தெற்குப் பிராந்தியத்தில் வழிநெடுகப் போராடிக்கொண்டே சென்றது. அப்படிப் போகும்போது, எல்லைப்புற மாகாணப்படை ஜகோடா என்ற கோட்டையை, பகைவர்களுக்குப் பின்னலிருந்து தாக்கி, தந்திரமாகக் கைப்பற்றியது. ஜகோடா ரோட்டில் உள்ள காக்னி ரிட்ஜ் என்ற இடத்தை, பஞ்சாப் இந்தியர்களும், பிரிட்டிஷாரும் பல சில்லரைப் போர்களுக்குப் பிறகு கைப்பற்றிக்கொண்டார்கள். பஞ்சாபியர்களும், எல்லைப்புற மாகாணத்தவர்களும், கரடுமுரடான பிரதேசங்களின்மூலம் சென்று, கடைசியில் அலமேலா என்ற ஊரைப் பிடித்துக்கொண்டார்கள்.

சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் என்ற இந்தியப் பட்டாளம் யுத்தத்தில் செய்த வேலை கவனிக்கத்தக்கது. ஜனவரிமீ 23-ந் தேதியிலிருந்து பிப்ரவரிமீ 2-ந் தேதி வரைக்கும், அவர்கள் 575 மைன்கள் அல்லது ரகசிய வெடிகுண்டுகளை நீக்கி, பிரித்துப் போட்டு

விட்டார்கள். பின்பு அலமேலா என்ற இடத்தருகில் உள்ள வெடிகுண்டுகளால் தாக்கப்பட்ட ஒரு பாலத்தை, யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது, செப்பனிட்டார்கள்.

இதில் 190 மைன்கள் பாரெண்டிலிருந்து எடுக்கப்பட்டன.

கேரன் பட்டணத்தில், பகைவர்கள் உறுதியாக நின்று வெற்றிபெற முயற்சித்தார்கள். 12 நாள் யுத்தம் நடந்தது. முடிவில் மார்ச்சுமீ 27-ந் தேதி கேரன் பிரிட்டிஷ் துருப்புகளாலும் இந்தியத்துருப்புகளாலும் கைப்பற்றப்பட்டது. மலையுச்சியிலுள்ள கோட்டையிலிருந்தும், பள்ளததாக்குகளிலிருந்தும் வருபவர்கள் நன்ருகப் புலப்படும்படியான சௌகரியம் பகைவர்களுக்கு இருந்தது. இதல்லாமல், பிரிட்டிஷ்துருப்புகளைவிட இடாலியர்கள் மிகவும் அதிகப்படியாயிருந்தார்கள். முதலில் செய்த பிரிட்டிஷ் முயற்சியில் பகைவர்களுடைய பலம் தெரிந்தது. கசாலாவிலிருந்து விரைவில் வந்ததும், கொஞ்சம் ஒய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டது. ஏனென்ருல், வெடிகுண்டு சாமான்கள், துணை யுதவித்துருப்புகள், இவைகள் வரும்வரைக்கும் காத்திருக்கவேண்டியதாய்விட்டது. கேரன்மலைமேல் ஒரு பாகம் வரைக்கும் முன்னேறியதைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இடாலியர்கள் மேலிருந்து ஓயாமல் துப்பாக்கிகளாலும், மெஷீன் துப்பாக்கிகளாலும் சுட்டுக்கொண்டேயிருந்தார்கள். இதனிடையில் சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் படையினர் தாம் கைப்பற்றிய பாகத்தை மிக தைரியத்தோடும், அஞ்சாநெஞ்சத்தோடும் காப்பாற்றினர்கள். நிழலிலே 105 டிகிரி உஷ்ணமாக இருக்குமிடத்தில் இம்மாதிரியான போர் செய்யவேண்டியிருந்ததென்ருல், எவ்வளவு கஷ்டங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டு முடிவில் வெற்றிபெற்றுர்களென்பது புலப்படும்.

இந்தக் கேரன் யுத்தம் மார்ச்சுமீ 15-ந் தேதி ஆரம்பித்தது. மார்ச்சுமீ 16-ந்தேதி நம்முடைய துருப்புகள் தால்கோரோடாக் என்ற கோட்டையைப் பிடித்து, 400 இடாலியர்களைக் கைது செய்தார்கள். அன்றிரவும் அடுத்தநாள் காலையிலும், பகைவர்களுடைய தாக்குதல்களுக்கிடையில், செபான்பலையை நோக்கி நமது துருப்புகள் சென்றன. அவைகள் திருப்பி சுட்டபோது, பகைவர்களுக்கு பலத்த சேதத்தை உண்டாக்கின. துப்பாக்கிப்படை உயர்ந்த திறமை காண்பித்து, பகைவர்களுடைய தாக்குதல்களுக்கெல்லாம் நகராமல், அவர்களுக்கு சேததத்தை விளைவித்ததைப்பற்றி பாராட்டிக் கூறப்பட்டது. நான்கு நாள் பகலும், இரவும் யுத்தம் நடந்த பிறகு அடுத்த போருக்குமுன் ஒய்வு ஏற்பட்டது. மார்ச்சுமீ 25-ந் தேதி தால்கோரோடோக் பக்கத்தில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து செய்த முயற்சியில் கேரனுக்குப் போவதற்கு நமது துருப்புகள் வழி செய்துகொண்டார்கள். இடைவிடாது மார்ச்சுமீ 27-ந்தேதி காலைவரை செய்த போரில் 'டாங்க்'கிகள் கேரனுக்குப் போவதற்கு வழி செய்யப்பட்டது. காலாட்படைகள் உடனே மும்முரமாக முன்னேறிச்சென்று கேரன்மலையைக் கைப்பற்றி, அநேக இடாலியர்களை கைதுசெய்து, அஸ்மாராவை நோக்கி ஓடுபவர்களை மோடார் படைகள் துரத்திச்சென்று வெற்றியைப் பூரணமாக்கிவிட்டது.

இந்தியாவின் பிரதம தளகர்த்தர் ('கமாண்டர் இன் சீப்') பிரிட்டிஷ் தளகர்த்தர் ஜெனரல் சர் ஜான் டில்லிடமிருந்தும், சர் ஆர்ச்சிபால்டு வேவலிடமிருந்தும், இந்தியத் துருப்புகள் இவ்வெற்றிகளுக்குக் காரணமாக இருந்ததைப்பற்றிப் பாராட்டி வாழ்த்துச் செய்தியைப்பெற்றுர். கேரன் வெற்றி பெற்றகாலத்தில் யுத்த அரங்கத்தில் இருந்த போபால் நவாப் அவர்கள், இந்தியத் துருப்புகளை மிகவும் பாராட்டிக் கூறியிருக்கிருர். இதல்லாமல், மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் மேன்மை தங்கிய வைஸ்ராய்க்கு ஒரு பாராட்டுச் செய்தி அனுப்பியிருக்கிருர். "கேரனைப் பிடித்ததில் இந்தியத் துருப்புகள் செய்த பேருதவியை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். பெருத்த கஷ்டங்களுக்கிடையில் பெற்ற இந்த வெற்றி, இந்தியாவின் ராணுவப்பெருமையை மிகவும் அதிகப்படுத்தியிருக்கிறது" என்று அவர் கூறியிருக்கிருர்.

இதற்குப்பின் மற்றொரு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. எரீடிரியவின் தலைநகராகிய அஸ்மாராவை, பிரிட்டிஷ் துருப்புகள் இந்தியத் துருப்புகளின் உதவிகொண்டு கைப்பற்றிக்கொண்டன. அநேக யுத்தக் கைதிகளையும், 10 இடாலிய பீரங்கிகளையும், இன்னும் இதர யுத்த சாமான்களையும் பிரிட்டிஷ் துருப்புகள் கைப்பற்றிக்கொண்டன. அடுத்த படியாக இருபது அபிசீனியாவின் தலைநகராகிய அட்டிஸ் அபாபாதான். அதைக் கைப்பற்றுவதிலும் இந்தியத் துருப்புகள் முக்கியமான உதவி செய்யலாம்.

இந்தியாவே ! நல்ல வேலை செய்தாய் ! அந்தப் பெருமையைக் காப்பாற்றிக்கொள் !

---

## யூகோஸ்லாவியா.

அரசர் பீடர் யூகோஸ்லாவியா அரசாங்கத்தைத் தானே வகித்தது, ஹிட்லர் கிரீஸைத் தாக்குவதென்ற ஏற்பாட்டுக்குத் தடை ஏற்பட்டது. இப்போது யூகோஸ்லாவியாவின்மேல் பொய்யான குற்றச்சாட்டுகளை ஏற்படுத்தி, போர் தொடங்கவேண்டும் என்பது வழக்கம்போல ஹிட்லரின் நோக்கம். ஆனல் யூகோஸ்லாவியா ஹிட்லருக்குக் கீழ்ப்படியாதென்று நினைக்க பலமான ஆதாரங்கள் இருக்கின்றன. எரீட்ரியாவிலும், அபிசீனியாவிலும், பிரிட்டனுக்குக் கிடைத்த வெற்றிகள், அல்பேனியாவில் கிரேக்கர்களுக்குக் கிடைத்த வெற்றிகள், இவைகளெல்லாம் யூகோஸ்லாவியாவை தைரியப்படுத்தும்படியான வெற்றிகள். ஏழு வருஷங்களாக ஜெர்மானிய ஒற்றர்களும், வேவுகாரர்களும், பலவித முறைகளை உபயோகித்து, கடைசியில் யூகோஸ்லாவியாவின் சரணுகதியைப் பெற முடியவில்லை.

சிறு நாடுகளைப் பயத்தினுலும், மிரட்டுதலினுலும், கைவசப்படுத்திக்கொண்டு வந்த ஜெர்மானிய யுத்த முறை யூகோஸ்லாவியாவிடத்தில் தோல்வியடைந்தது. அதல்லாமல், ஜப்பானிய அயல் நாட்டு மந்திரி மிஸ்டர் மத்சூகாவிடம் பெருமை காட்ட நினைத்த எண்ணமும் வீணுய்ப் போய்விட்டது. ஜெர்மனி இப்போது பால்கன் பிரதேசத்தில் தன்னுடைய தந்திரத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். கிரீசினுடைய நிலைமை பலப்பட்டுக்கொண்டு வருகிறது. மிஸ்டர் ஈடனும், சர் ஜான் டில்லும் கிரீசின் தலை நகராகிய ஆதன்ஸில் இரண்டாவது தடவை வந்து பேசுவது கிரீசுக்குப் பலமும், யூகோஸ்லாவியாவுக்கு மகிழ்ச்சியும், பால்கன் பிரதேச மக்களுக்குத் தைரியமும் கொடுக்கும்.

---

## இடலி.

இடலியினுடைய நிலைமை பரிதாபப்படும்படியான துக்க நிலையிலிருக்கிறது. ஜெர்மனியின் அடிமை நாடாக இருக்கும் நிலைமையை இடாலிய மக்கள் வெறுக்கிருர்கள். அல்பேனியாவில் தோல்வியும், கிழக்காப்பிரிக்காவில் படுதோல்வியும் பெற்றதைக் கண்டு இடாலியர்கள் யுத்தம் மேலும் நடப்பதை விரும்பாதிருக்கிருர்கள்.

அபிசீனியாவில் இடாலியர்கள்மேல் பழிக்குப் பழி வாங்கும் எண்ணம் இருக்கும்படி 1937-ம்ஞு இடலி நடந்துகொண்டது. அறுநூறு அபிசீனியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆனல் அபிசீனியர்கள் பழி வாங்காமல் இருப்பதற்கு பிரிட்டன் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

---

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவு செய்து ஒன்றின்கீழ் ஒன்ருக விடாமல் சேர்த்துவரவும்.**

ஈஸ்டர் விடுமுறை காரணமாக யுத்த சஞ்சிகையின் அடுத்த இதழ் ஏப்ரல்மீ 10உ வியாழக்கிழமை வெளியிடப்படும்.

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.